உ

பரமபதி துணை.

ஸ்ரீ ஞானசம்பந்த குருவே நம:

திரு அம்பர் மாகாளக்ஷேத்திரத்தில் நடந்தேறிய

ஸ்ரீஸோமாசிமாற நாயனார் சரித்திர

உண்மை விளக்கம்.

திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறை யாதீனத்து

மகாவித்வ சிரோன்மணியாகிய

யாழ்ப்பாணம் வடகோவை

ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள்

மாணாக்கரும்

நெய்க்குப்பை

மகா-௱-௱-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளை அவர்கள்,

குமாரருமாகிய

குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களால்

செய்தது.

இந்நூலாசிரியர் சமயன் குமாரர்

க. சண்முகம் பிள்ளை என்று வழங்கும்

சிதம்பரம் பிள்ளையால்

மாயவரம் ஸரஸ்வதி விலாஸ பிரஸில்

அச்சியற்றப்பட்டது.

1909

பரமபதி துணை.

ஸ்ரீ ஞானசம்பந்த குருவேநம:

திரு அம்பர் மாகாளக்ஷேத்திரத்தில் நடந்தேறிய

ஸ்ரீ ஸோமாசிமாறநாயனர் சரித்திர உண்மை விளக்கம்.

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
சீர்காழி.
(1982)

திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறை யாதீனத்து

மகாவித்வ சிரோன்மணியாகிய

யாழ்ப்பாணம் வடகோவை

ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள்,

மாணாக்கரும்

நெய்க்குப்பை

மகா-௱-௱-ஸ்ரீ பொன்னம்பல பிள்ளை அவர்கள்,

குமாரருமாகிய

குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களால்

செய்தது

இந்நூலாசிரியர் தமயன் குமாரர்

க. சண்முகம் பிள்ளை என்று வழங்கும்

சிதம்பரம் பிள்ளையால்

மாயவரம் ஸரஸ்வதி விலாஸ பிரஸில்

அச்சியற்றப்பட்டது.

1909

உ

இஃது

திருக்கைலாயபரம்பரை

திருவாவடுதுறையாதீனத்து

ஸ்ரீலஸ்ரீ சற்குருமூர்த்திகளாகிய

அம்பலவாண தேசிக பண்டாரசந்நிதி

யவர்கள் தர்மப்பொருளுதவியால்

அச்சியற்றப்பட்டது.

உ

பரமபதி துணை.

திரு அம்பர் மாகாளக்ஷேத்திரத்தில் நடந்தேறிய

ஸ்ரீ சோமாசிமாறநாயனுர் சரித்திர உண்மை விளக்கம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெலா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப் போழிளமதிசூடிப்
பில்குதேனுடை நறுமலர்க்கொன்றையும் பிணையல் செய்தவர்மேய
மல்குதண்டுறையரிசொலின் வடகரை வருபுனல் மாகாளம்
அல்கு நண்பகலுந் தொழுமடியவர்க் கருவினை யடையாவே

மாறு தன்னொடு மண்மிசையில்லது வருபுனன் மாகாளத்
தீறுமாதியுமாகிய சோதியை யேறமர் பெருமானை
நாறுபூம் பொழிற் காழியுள்ஞானசம்பந்தன் தமிழ்மாலை
கூறு வாரையுங் கேட்க வல்லாரையுங் குற்றங்கள் குறுகாவே

அடையார் புரமூன்று வனல் வாய்விழ வெய்து
மடையார் புனலம்பர்மாகாளம் மேய
விடையார் கொடி யெந்தை வெள்ளைப் பிறைசூடுஞ்
சடையான் கழலேத்தச் சாராவினை தானே.

வெருநீர் கொள வோங்கு வேணுபுரந்தன்னுட்
டிருமாமறை ஞானசம்பந்தன் சேனூர்
பெருமான் மலியம்பர்மாகாளம் பேணி
யுருகாவுரை செய்வாருயர் வானடைவாரே.

மகா புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தில் உள்ள பல நாடுகளுள் இத்தென்னுடானது சிதம்பரம், வழுவூர், திருவம்பர் மாகாளம், திருவாரூர், காஞ்சிபுரம், நாகை, சிக்கல், உத்தரகோச மங்கை, திருவாலவாய், திருவிராமேச்சுரமுதலியஅனேக திவ்விய வைதிக சைவஸ்தலங்களைத்தன்னிடத்துப்பொருந்தக்கொண்டிருத் தலானும் திருஞானசம்பந்தமூர்த்தி முதலிய வைதிக பரமாசாரிய சுவாமிகள் நால்வரும் அனேக உண்மை நாயன்மார்களும் திருவ

வதாரஞ்செய்து பரமேச்வரன் திருவருட் பிரசாதம் நிலையிட்டு விளக்கி அனுக்கிரகஞ் செய்தற்குரிய சிறத்தலானும், மற்றை நாடுகளைக்காட்டினும் மிக மேலாய் விளக்கமுறுவதொரு நன்னாடாம். இந்நன்னாட்டில் (மா) விருக்ஷங்களால் நிறையப்பெற்ற திருஅம்பர் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் மகாபரிசுத்தமான மனதுடையவர்களாயும், நிச்சியவறிவுள்ளவர்களாயும், நான்கு வேதங்களை யோதும் சற்பிராமணர் குலத்திற்கோர் மேலோராயும், கற்பிற் சிறந்த பத்தினியோடு இல்லறாச்சிரமத்தின் கண்ணிருந்து தாண்டவம் புரிய வல்லதம்பிரானுடைய அடியார்கள்வரின் அவர்கள் எக்குலத்தவராயினும் அவர்கட்கு பாதம் பணிந்து நம்மையாளும் வண்ணம் இவ்வித கோலமாய் எழுந்தருளிய திருமேனியென்று யெண்ணங்கொண்டு அவர்கட்கு பாதபூஜை முதலானதும் ஆகமங்களில் விதித்தவண்ணஞ்செய்து அறுசுவையோடு அன்னமளிக்கும் நற்பண்பின் மிக்காராய் சோமாசிமாறர் என்ற திருநாமத்தோடு மகாபக்த சிகாமணி ஒருவரிருந்தருளினர்.

சூதம் பயிலும் பொழிலம் பரிற்றூயவாய்மை
வேதம்பயிலு மறையாளர்தன் குலத்தின் மேலோர்
ஏதம் புரியுமெயிலெய்தவர்க் கன்பர் வந்தாற்
பாதம் பணிந்தார முதூட்டு நற்பண்பின் மிக்கார்

அப்பக்த சிகாமணியானவர் இப்பூவுலகத்தின்கண் ஆன்மாக்கள் பிறந்திறந்துழலும் விஷயங்களை யோசிக்க ஆரம்பித்தனர். அஃதாவது பூத முதலிய பொருள்களெல்லாஞ் சடப்பொருள்களாயிருத்தலால் அவற்றின் சமுதாயமாகிய இந்த உடம்பிற்கு வேறாக ஆன்மா ஒன்று உண்டென்று துணியப்படுகின்றது. அவ்வான்மாக்கள் நிரவயப்பொருள்களாயிருத்தலால் நித்தியமாகியும் விளக்க விளங்குஞ் சேதனமுடைமையால் ஸ்தூலசித்துப் பொருள்களாகியும், கருவிகளையன்றி அறிவிச்சை செயல்கள் விளங்கமாட்டாமையால் அநாதியே சகசமலத்தாற்றடைப்பட்டுள்ள ஞானசத்தி கிரியாசத்தி இச்சாசத்திகளையுடையனவாகியும் ஒரே காலத்தில் மாறுபடும் வெவ்வேறு அறிவும் வெவ்வேறு தொழிலும் உடைமையால் சரீரந்தோறும் வெவ்வேறாகியும் வசித்து விரியும் அறிவுடைமையால் வசித்திட வரும் வியாபகமுடையனவாகியும் தர்மாதர்மாதர்மங்களைச்செய்து நால்வகை யோனியுட்பட்ட எழுவகைத்தோற்றத்து எண்பத்துநான்கு நூறாயிரங் கதிபேதங்களெய்தி ஓர் மாதாவினுடைய கர்பத்திலமைந்து பத்தாவது திங்களில் தாயுந்தானும் வாயினாற் சொல்வதற்கும் கையினால் எழுதுவதற்கு முடியாத துன்பமாகிய கடலினும், ஒவ்வோர் வயது உயர்ந்து வருகின்ற காலங்களில், மலம், பசி, வேலை, நித்திரை, யாத்திரை

யிலும், மேகம் போன்ற கூந்தலும், கொவ்வைக்கனிபோன்ற வாயும், முத்து வரிசைகள் போன்ற பற்களும், மயில் போன்ற சாயலும் இடையானது வருந்த மேலே எழுந்து புடை பரந்து மதர்த்து கச்சற நிமிர்ந்து முன்பணைத்து ஈர்க்கு மத்தியில் செல்வதற்கு மார்க்கமில்லாமல் நெருங்கிய இளமுலைகளையுடைய ஸ்திரீகள் தங்கள் கடைவிழிகளால் பார்த்தலாகிய பெருங்கொள்ளையிலும் இவ்வுலகின் கண்ணுள்ள தேவபாஷை, மனுஷிய பாஷை, களாகிய பெரிய சமுத்திரத்திலும், ஐசுவரியமாகிய மகா அல்லலிலும், தரித்திரமாகிய கொடியவிடத்திலும், அற்ப காரியங்களாகிய அநேக விதத்திலும் பிழைத்தாலும் அநேக தண்ணீர்ப்பந்தல் முதலாகிய சற்கருமங்கள் செய்தாலும் இந்த ஜென்மத்தில் நம்பெருமானை அடைவதற்கு மார்க்கம் ஒன்றும் தோணவில்லையே என்று கண்ணீர் விட்டு நம்பெருமானை பஞ்சாட்சர முன்னிலையாய் தியானஞ் செய்துகொண்டு நம் ஆன்மகோடிகள் நிமித்தமாக தெளிவுடையவராய், சோகமில்லாதவராய், வெளிப்படாதவராய் ஏகராய், முக்கண்ணராய், நீலகண்டராய், சமஸ்த சாக்ஷியாய் முற்றுணர்வு முதலிய எண்குணங்களையும் சொரூப இலக்கணங்களாகவுடைய முழுமுதற்கடவுளாகிய பரமசிவன் மா சங்காரகால முடிவின்கண் உலகங்களை மீளப்படைத்தற்பொருட்டு மேற்கூறிய விசேடமமைந்த பரமாத்மாவாகிய தலைவனுடைய பராசத்தி குடிலையை நோக்க, வேதாகமங்கள் குடிலையினின்று நாதவடிவாயும், அதன் பின், விந்துவடிவாயும், அதன் பின், அக்கரவடிவாயுமுறையே தோன்ற, அவற்றை தொடர்ப்படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க் கருளிச்செய்தற்பொருட்டு, பரமசிவன் ஈசான முதலிய பஞ்சப் பிரமமனுக்களாகிய சத்திகளே திருமுடி முதலிய வவையவங்களாகச் சகள நிட்களத்திருமேனி கொண்டருளிச்சதாசிவமூர்த்தியாய் நின்று தற்புருட முதலிய நான்கு திருமுகங்களான் நான்குவேதங்களைத்தோற்றுவித்து, மேற்கண்ணதாகிய, ஈசான முதலிய, ஐந்து திருமுகங்களானும் காமிக முதலிய விருபத்தெட்டாகமங்களையுந் தோற்றுவித்து வேதங்களை யனந்த தேவர் வழியான் பிரமக்கருளிச்செய்து சிவாகமங்களை பிரணவர் முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதயிய பதினெண்மருமாகிய விருபத்தெண்மருக்கும் சிவபேத முருத்திர பேதமெனப்பகுத்தோரோவொன்றெவ்வொருவருக் கருளிச்செய்து பின்பு அவ்விருபத்தெட்டினையும் வித்தியேச ரெண்மரின் முதல்வராகிய வனந்த தேவருக்கருளிச்செய்தான் அவற்றை அனந்த தேவர் சீகண்டருத்திரர்க்கருளிச்செய்தார். சீகண்டருத்திரர் கணங்கட்கும் முனிவர்கட்கும் தேவர்கட்கும் அளித்தற்பொருட்டு நந்திபெருமானுக கருளிச்செய்தார். இவ்விதமாக அப்பரமசிவனால் சூத்திரமும் பாடியமும் போல் அருளிச்செய்த வேதாகமங்களை தாம் உய்யும் மார்க்கம்

யாதெனவாராய்ந்து யோசிப்பாராயினர். வேதம் பொது நூலும் சிவாகமம் சிறப்பு நூலுமாம் இனி வேதாகமங்களில் பரமசிவன் உயிர்கட்கு உறுதியென எடுத்துக்கூறியருளிய கருமங்கள் பசு தருமம் சிவதருமம் என இரண்டாம். பசுக்களை நோக்கிச் செய்யப்படும் தருமம் பசுதருமமாம் பசுபதியாகிய சிவபிரானை நோக்கிச்செய்யப்படும் தருமம் சிவதருமமாம். பசு தருமங்கள் வேத நூலானும், சிவதருமங்கள் சிவாகமநூலானும் விதிக்கட்படும். சிவாகமத்தால் விதிக்கப்படும் சிவதருமவகையும், அவற்றுனெய்தும் ஞானப்பகுதிகளும் அவ்விரண்டின் பயனான பேறுகளும் சிவ தருமஞானவியலில் வகுத்துரைக்கப்பட்டன. இனிப்பசு தருமங்கள், கூவல், குளந்தொடுதல், தண்ணீர்ப்பந்தர், அன்னசாலை, வைத்தியசாலை அமைத்தல், கட்புலனான பசுபார்ப்பார் தந்தை தாய் முதலாயினோரை வழிபடுதல், கட்புலனாகாத அரி அயன் இந்திரன் முதலியதேவர்களை வழிபடுதல் என பலதிறப்படும். இனி "யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் தாம் வருவார்" என்னுமுறையால் பசுக்களை நோக்கிச் செய்யுந் தருமமும் சிவபிரானே ஏன்று கொள்வன் ஆயினும் அவை சிவதர்மங்களெனப்படா. யாதினாலெனின் பசுதருமம் சிவதருமமெனப் பகுத்தது செய்வார் கருத்து வேறுபாடு பற்றியேயன்றி ஏன்று கோடல் பற்றியன்று; அதனாலென்றுணர்ந்து கொள்க.

பசு புண்ணியங்கள் செய்வார் இகத்தும் பரத்தும் அரோக திட சரீரமும் செல்வமும் உற்றுப்போக வாழ்வில் மேம்படவேண்டுமென்னுங் குறிப்புடையவராவர்.

அக்குறிப்புணரா நிற்கும் பசுபதியாகிய சிவபிரான் அவர்காமிக வினைகளை ஏன்றுகொண்டு அவர் கருத்தின் படியே அப்போகவாழ்வுகளை அவர் தமக்கு ஊட்டாநிற்பன். சிவ புண்ணியஞ் செய்வார் தேகாதிபந்தபாசங்களை யறுத்துச்சிவபிரானுக்கு காட்பட்டு அவன் திருவருட் சிவானந்த மெய்வாழ்வு கூடல் வேண்டுமென்னும் அருட்குறிப்புடையவராவர். அவர் அருட்பற்றுணராநிற்குஞ் சிவபிரான் பந்தபாசங்களை யறுத்து அவரைத்தன்னருள் வாரியில் மூழ்குவித்து அவ்வண்ணமாக்கிப் பரானந்த வாழ்வை அவர்க்கு பிரசாதித்து ஊட்டாநிற்பன். இன்னும் பசுதருமஞ் செய்வார் தனுகரணங்களும் புவனபோகங்களும் தமக்கு வேறாகக்காணும் மெய்யுணர்வின்றி அகங்கார மமகாரப்பசுபோத முதிர்ச்சி மிகவுடையராய் நின்று அவ்வினைகளைச் செய்பவராவர். சிவதருமஞ்செய்வார் தனுகரணபுவன போகங்கள் தமக்கு அன்னியமாமென்றும், அவை அனித்தியமுந்துக்க வதுவுமாமென்றும்,

அவற்றின்கட் செய்யும் பற்றுக்களால் பிறப்பிறப்புப் பெருகி முடிவில் துன்பப் பெருங்கடலுட் படிதல் ஒருதலையாமென்றும் மெய்யுணர்ந்து அகங்காரமமகாரமின்றி பரசிவ ஞானப்பற்றே பற்றி அதனோடு ஒற்றித்து நின்று அவ்வினைகளைச் செய்யா நிற்பர் இம்முறைகளால் பசுதருமங்களும் சிவதருமங்களும் தம்முள் வேறுபாடு மிகவுடையவாதல் தெற்றென வுணர்ந்து கொள்க. அவை அங்ஙனமாகுக. ஆயினும் தண்ணீர் பந்தல் முதலிய வுலகவினை போலன்றி வேள்வி முதலிய வைதிக வினைகள் சிவனை நோக்கி அவிர்ப்பாகங்கொடுத்தலும் வழிபடுதலுமுடைமையின் அவை சிவபுண்ணிய மாமென்றற்கிழுக்கென்னையெனின், ஆண்டுச் சிவபிரானுக்கு அவிர்ப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலும் பசுக்களாகிய ஏனைக்கடவுளரோடொப்பவைத்துச் செய்தலேயன்றிப் பொதுநீக்கிப் பசுபதி என்னுங் கருத்தாற் செய்தலின்மையின் அவையெல்லாம் செய்வோர் கருத்துவகையால் பசுபுண்ணியமேயாம்; சிவபுண்ணியமாகாவென்க அகப்புறப்பற்றறுத்துப் பொதுநீக்கிச் சிவபிரான் பசுபதியென்னுங் கருத்தாற் செய்தலே சிவபுண்ணியமாம் என்பது. "அகன்ஞாலத்தகத்துட்டோன்றி வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன் களகத்தடக்கி மடவாரோடும்பொருந்தனைமேல் வரும் பயனைப்போக மாற்றிப்பொது நீக்கித்தனை நினையவல்லார்க்கென்றும் பெருந்துணையைப்பெரும் பற்றப்புலியூரானை" என்னுந்தேவாரச்சுருதியானுமுணர்க. இனி வேள்வி முதலிய வைதிகவினைக்கண் சிவபுண்ணியமும் அபுத்திபூர்வமாய் நிகழ்தலின் அது புத்தி பூர்வமாய் இனிச்செய்யக்கடவனவாகிய சிவபுண்ணியங்களுக்கு ஏதுவாதல் மாத்திரையால் பயன் படுதலுடைத்தென்க. அவ்வைதிகவேள்வி முதலியனவும் சிவபிரானை நோக்கிப் பொது நீக்கிச்செய்யின் அஃது ஏனையபோல பசுபுண்ணியமாதலின்றிப்பொதுச்சிவபுண்ணியமாமெனக்கொள்க இஃது உலகவினைக்கண்ணும் ஒக்கும். இவ்வைதிக வினையான பொதுச்சிவ புண்ணியம் சிவாகம தருமமான பொதுச்சிவ புண்ணியம்போலச் சிறப்புச் சிவபுண்ணியத்திற்கு ஏதுவாதன் மாத்திரையால் பயன் படுதலுடைத்தென்க. அஃதங்ஙனமாக; வேதியரிற்சிலர் வைதிக சைவர் சிவசாஸ்திரங்கள் பற்றி இங்ஙனம் வேள்வி முதலிய வைதிகவினைகள் பசுபுண்ணியங்களாமென்றும். சரியை கிரியை யோகமென்னுஞ் சிவாகம நல்வினைகள் சிவபுண்ணியங்களாமென்றும்- ஆண்டாண்டுக்கூறும் மெய்யுரையின் உண்மை தேறமாட்டாது, அது வேதவேள்வியை நிந்தனைசெய்வதாக அலர்தூற்றுகின்றார்கள். ஆயின் அது வேதவேள்வி நிந்தனையாகமாட்டாது. வேதாகமங்களிரண்டுஞ் சிவபிரானருளுச்செய்த முதனூல்களாமென்றுகொண்டு, அவற்றின் வழியொழுகும் வைதிக சைவர் நிரைய வேதுவான வேதாகமநிந்தை

செய்ய ஒருப்படமாட்டார். அவர் மறைகணிந்தனை சைவநிந்தனை பொருதவிரதியர்கள். நரகவேதுவான சிவாகம நிந்தனை கடைப்பிடித்து விரதமாகக்கொண்டு செய்வார் சிலவேதியோர் முதலியோரே.

வேள்வி முதலிய வைதிகவினைகள் காமியவினைகளென்பதும் அவை சுவர்க்கலோகம் பயப்பதன்றிப் பிரமஞானசாதனங்களாகாவென்பதும் வேதாகமத்துணிபாம். இனி வேள்வி முதலியவற்றை விதித்த வேதநூலே அவற்றிற்குப்பயன் காமியமென்பதும் உடன் கூறுகின்றது. இனி காமியப்பொருளெல்லாம் அழிவெய்துமென்பது எல்லார்க்குமொப்பமுடிந்தது. அதனால் அவ்வழிவெய்துந்துறக்கபோகம் பயப்பனவாகிய வேள்வி முதலிய புண்ணியங்கள் அழிவின்றிநிலைபேறுடைத்தாகியஞானத்தைப்பயக்கமாட்டாவாம் ஆகவே அவை வீடு பேறு பயக்கும் ஞானவேதுவான நல்வினை யாகமாட்டாதென்பது துணிபாம். இன்னும் வேள்வி செய்வார், அவ்வேள்விப்பயனைச் சுவர்க்கத்திற் சென்று, அனுபவித்தபின்னர், ஆண்டு நின்று நீங்கி மீள நிலத்தின்கண் வந்து பிறந்து மீட்டும் வினை ஈட்டி உழல்வர்; வேள்வியாகிய நல்வினைப் பயனை சுவர்க்கத்திற்சென்று துய்க்கா நின்றார், அந்நல்வினைப்பயனை ஆண்டு அனுபவித்த பின்னர், தாம் ஈட்டிய தீவினைப்பயன் துய்க்க ஆண்டு நின்றவாற்ற நிரையத்திற்போக்கப்படுபவருமாவர். ஒருவனுக்குப் பந்தமுறுத்துதற் கண்பாவ வினைகள் இருப்புவிலங்குபோலும். வேள்வி முதலியபசுபுண்ணியங்கள் பொன்விலங்குபோலும் அப்பசுபுண்ணியங்கள் பாவவினைகள்போலஞானநிகழ்வொட்டாது தடை செய்து நிற்பதுமாம்.

தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார்

"இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு"

என்று இந்நல்வினை தீவினைகளைச் சமப்படுத்துஉரைத்தருளியதூஉம், இக்கருத்தேபற்றி யென்றுணர்ந்துகொள்க. சரியை, கிரியை, யோகங்கள், செய்வார். அவற்றின் பயன்களைப் பதமுத்திகளில், அனுபவித்து வைகும் ஆண்டுத்தானே வினையொப்பு நேர்ந்து ஞானநெறியைத் தலைப்பட்டு வீடு பேறு கூடுவர். வினையொப்பு ஆண்டு நேராகாவிடின் மீளநிலத்தின்கண் வந்து பிறந்து வினையொப்பு நிகழ்ந்து ஞானகுரவன் திருவருள் பெற்று ஞானத்தைத் தலைப்பட்டு வீடு பேறு கூடுவர், ஆகலின் ஆண்டு "இருவினை" யெனத்தீவினையோடு உடன் கூட்டி எண்ணப்பட்ட நல்வினைவேள்வி முதலிய பசுநல்வினைகளேயன்றிச் சரியை கிரியை முதலிய

சிவநல்வினை யாகாவென்று ஒரு தலையாகவுணர்ந்து கொள்க. வேள்வி முதலிய பசு நல்வினைகள் சுவர்க்கபோகப்பயன் உதவும் காமியங்கள் என்பது "சுவர்க்கம் வேண்டியோன் சோதிட்டோமத்தான் வேட்க" என்றற்றொடக்கத்துச்சுருதிகளானும், "சுருதி வழியொழுகினர்கள் சுவர்க்கத்தர்" என்றற்றொடக்கத்துப்புராண வசனங்களானும் "தானமியாகந் தீர்த்த மாச்சிரமந் தவங்கள் சாந்திவிரதங்கள் மயோகங்கள் சரித்தோர்—ஈனமிலாச்சுவர்க்கம் பெற்றிமைப்பொழுதின் மீளவர்" என்றற்றொடக்கத்துச்சித்தாந்த வசனங்களானும், உணர்க. சரியை கிரியா யோகங்களென்னும் சிவ புண்ணியங்கள், பசு புண்ணியப்பயன் போல விரையக்கெடாத சிவசாலோக சிவசாமீப, சிவசாரூபமென்னும், அபரமுத்திப் பயன்களை உதவு முகத்தால் ஞானவேதுவாய் வீடு பேறு கூடுவிக்கு மென்பது, "ஈசனியோகக்கிரியாசரியைகளினின்றோ—ருனமிலா முத்தி பதம் பெற்றுலக மெல்லாமொடுங்கும் போதரன் முனிலாதொழியினுற்பவித்து—ஞானநெறி யடைந்தவர் சிவனை யங்குநாதனே முன்னிற்பின் நணுகுவர் நற்றுளே" "ஆகம நூற்சரியை கிரியாயோகத் தன்மையோர்க்குச் சாலோக சமீப சாரூபங்கள்— மருவியிடும்" என்றற்றொடக்கத்துச் சித்தாந்த வாக்கியங்களானும், "ஆகமநூற்— சரியை கிரியா யோகர் சாலோக சாமீப—வுருவுவமையிலாக வுதவுது மெய்முடனுகும்— பெருகிய ஞானிகளெம்மைப் பெற்றுர் போர் கற்றுரே" என்றற்றொடக்கத்துப் புராணவசனங்களானு மறிக. இன்னும் "சைவ நூலிற் கூறப்பட்டதும் மேலானதுமாகிய தீக்ஷையைத்தவிரவேறு யாதொரு ஆச்சிரமும் இவ்வுலகத்திலே மனிதருக்கு மேன்மையாகாது; ஆதலால் தீக்ஷயினற்றன் மோக்ஷப்; ஆச்சிரமக்களானும் மற்றைக்கருமங்களானும் மோக்ஷமில்லை அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும் ஜீவகோடிகள், கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர் போல்வர். தோணியின்றி கடலைக்கடக்க விரும்பினவரும் போல்வர்" என்றும், "இங்கேமுப்பாசத்தையகற்றுவதும் மேலானதும் சிவசம்பந்தமுடையதுமாகிய தீக்ஷையாலன்றி ஆன்மாக்களுக்கு ஆச்சிரமத்தாற் செய்யப்பட்ட உயர்ச்சி ஒன்றுமில்லை.

ஆதலால், தீக்ஷயாலே முத்தியுண்டாம். "ஆச்சிரமங்களாலும் பிறகருமங்களானும் முத்தியுண்டாகமாட்டாது. என்னும், வாயு சங்கிதை காந்தம் முதலிய புராணங்கள் கூறுமாற்றானும், சிவாகமத்தால் விதிக்கப்படும் தீக்ஷநெறியான சிவதருமஉயர்ச்சி தெளிக.

இன்னும் தருமங்களெல்லாவற்றிற்கும் ஜீவகாருண்ணியமென்னும் அருளாட்சியே மூலமாமென்பது அறநூல்களெல்லாம் எடுத்துக்கூறும் மெய்ம்முறையாம். வேதாந்தங்களும் ஜீவஹிம்சை

செய்யாமை அறங்கட்கெல்லாம் தலையாய அறமா மென்று முறையிடும். இனிச்சைவாகமங்கள் அக்கொல்லாமையைத் தலையாய வறமென்றெடுத்து நிறுத்தி, முத்திகாமிகளான சத்தினிபாதமுடைய வுத்தமர், அக்கொல்லாவறந்தலைநின்று அரன்பணியான சரியை கிரியாயோகமென்னும் சிவதன்மம் பேணற்பாலராவர் என்று விதந்துரைக்கும் வேதங்களே போககாமிகளான உலகர், அச்சீவகாருண்ய அறம் துறந்து புன்மையாம். பசுத்தடிதலைச்செய்து புரையில் வேள்விகளாற்றற்பாலரென்று ஓதும் ஆதலின், தலையான ஜீவகாருண்ணியமான அருளறந்துறந்துநின்றுபசுத்தடிந்து போகம் வேண்டிச்செய்யும் வேள்விகளினும், கொல்லாமை மேற்கொண்டு அருளறந் தலை நின்று வீடு பேறு குறித்துச்செய்யும் பசுபதியாகிய சிவபிரான் பணியான சரியை கிரியா யோகமென்றும் சிவதன்மக்கள் மிகமேலான நல்வினைகளென்பது சொல்லா தேயமைவதாம்.

"அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர் செகுத்துண்ணாமை நன்று"

"நல்லாரெனப்படுவதியா தெனின் யாதொன்றுங்
கொல்லாமைசூழுநெறி"

என்று தமிழ் வேதத்துள் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருவாக்குக்களும் இவ்வுண்மைஇனிதுதெளிவிக்கு மாறு காண்க.

வேதங்கள், தாம் பசுபதியின் உரைகளென்றும், பசுபதியாகிய அப்பரம சிவனே பரம் பொருளென்றும், அவ்விறையவனே வேள்விகட்கெல்லாம் தலைவனென்றும், அப்பெருமானை அவனடியரான தேவர்களோடு ஒருங்கு ஒப்பவைத்து வழிபடுதல் பழுதென்றும், முறையிடுவனவாம். ஆயினும் வேள்விவினை செய்வாரெல்லாம் இவ்வுண்மை கடைப்பிடித்து நின்று அவ்வாறு செய்பவரென்று கூறமாட்டோம் வேள்விவினைசெய்தற்குரிய வேதியர் உருத்திரனைப் பரதெய்வமாகக் கொள்வாரும், நாராயணனைப் பரதெய்வமாகக்கொள்வாரும் இரணியகருப்பனைப் பரதெய்வமாகக் கொள்வாரும், அக்கினியை பரதெய்வமாக கொள்வாரும் இந்திரனைப் பரதெய்வமாகக் கொள்வாரும், ஏனைக்கடவுளரைப்பர தெய்வமாகக் கொள்வாருமாய்ப்பலதிறப்படுவர். இத்திறத்தருள் பசுபதியும் துரியனுமான பரமசிவனதுஉண்மையானபரத்துவம்தெளியவர்மிக அரியர்மேற்கூறியவாறு உண்மை தெளியாது வேதவேள்வி செய்வார். சுவர்க்கமேல் நாடுகூடித்தேவராய்ஆண்டைப் பெரும் போக. வாழ்வு கூருவர் என்பதே வேதத்துணிபாம் நூறுவேள்வி வேட்டான் மகவானாய் தேவநாதனாய்மேம்படுவனென்பதும் அவ் வேதத்துணிபாம். இவன் தேவேந்திரனாய் அயிராணிகொழுநனாய் பெரும்போகவாழ்வுகூடுபவனும்இவன் கற்பகதருவும்காம தேனு

வும்சிந்தாமணியும்பிறவும்வேண்டியநல்கஅமிர்தமுண்டு சுரேசனுய் அரசு வீற்றிருப்பவனும். இவனுக்குச்சயந்தனென்றெருவன் வய ந்தருபுதல்வனுய்ச் சிறப்பன். இவற்கு மாநிலவேந்தற்குப்போல அஃமேல் நிலத்தில் பகைவராய் அசுரர் மேவுவர். சூரனென்றும் அசுரேசன் இவ்விந்திரனுக்கு உறுபகைவனுயினன். இவ்விந்தி ரன் அவ்வசுரேசன் பகைக்கஞ் சிச்சுவர்க்கலோகம் விட்டுக்கரந் தோடி மறைந்தான். சூரன் புகல்வனன பானுகோபன் சுவர்க் கத்தின் மேற்படையமைந்து சென்று அந்நகரத்தை முற்றுச்செய் தான். அதுகண்ட தேவர்கள் அஞ்சி நடுக்குற்றுச்சயந்த குமா ரனைச்சரணடைந்தார். சயந்தன் தேவரோடு படையமைந்து போந்து பானுகோபனுேடு போர்புரிந்து அவற்குத்தோற்றுத்தே வரோடு அவன் சிறையகப்பட்டான். பானுகோபன் சுவர்க்க நக ரைத்தீக்கு விருந்தாக்கிச்சயந்தனை தேவரோடு கொணர்ந்து மகே ந்திரத்திற்சிறைப்படுத்தான். சயந்தனுந் தேவரும் பற்பலயுக மாக நெடுஞ்சிறைப்பட்டு கடுந்துயருழந்தார். இவ்வாறு காந்தத் துட்கூறப்பட்டது.

"காடுபோந்தனனிந்திரன் பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடைப்பட்டான்
நாடில் விண்ணவர் செய்கையீதெம்பிரான் நல்கும்
வீடதேயலாற்றுன் புறமாக்கம் வேறுண்டோ."

என்று சுவர்க்கவாழ்வினிழிவு இங்ஙனம் எடுத்துப்ப ணித்தார். இங்ஙனம் எடுத்துக்காட்ட நிற்கும் சுவர்க்க இழிவு ணர்த்தும் கதைகள் மிகப்பலவாம். சிவபுண்ணியங்களா னெய்தும் பயன்கள் சிவசாலோக சிவசாமீப சிவசாரூபபதமுத்தி களும் அபரமுத்திகளுமாம். அவை சுவர்க்கத்துக்கு மேலான தத்துவபுவனங்களுட்பட்ட பெருவாழ்வுகளாம். ஆண்டுச்சிவ போகந்துய்ப்பார் சுவர்க்கத்தேவர்போல் வாழ்வில் மயங்கி மைந் துறு நீரராகார். சிவபோகந்துய்க்கு நெறியிற்சிவஞான மெய்தி மேலவீடு பேறுகூடுபவருமாவர். செய்ம்முறையானன்றிப் பய னுகரும் இம்முறையானும் பசுபுண்ணியத்தினும் சிவபுண்ணியம் மிகமேலானதென்பது இனிது விளங்குமென்க. ஆளுடைய பிள் ளையாரும்

"மங்குறோய் மணிமாட மதித வழுநெடுவீதிச்
சங்கெலாங்கரைபொழுது திரைபுலம் புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவரிவண்டினிசை பாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே"

என்று திருச்சாய்க் காட்டுத்திருப்பதிகத்துள் அருளிச் செய்ததிலும் "கொன்றைத் தொங்கலான் அடியர்க்குச்சு வர்க்கங்கள் பொருளல" என்று அருளிச்செய்த திருவாக்கு

மெய்யடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளாகா; அன்னால்லாரன உலகர்க்கே அவை பொருளாம் என்னும் பொருள் போதித்தலின், அது அதிகாரிதாரதம்மியம் பற்றிக் கட்டளையிட்டருளிய நீதியாயிருக்கின்றது. பசு தன்மம் சிவதன்மம் எனவிதித்ததூஉம், அதுபோல அதிகாரிதாரதம்மியம் பற்றியே முறையே யாகலின், பசு தன்மம் நீக்கி சிவதன்மம் செய்ய நம்மால் முடியக்கூடுவதாய்த் தோணவுமில்லையே, சிவஞான சிவபுண்ணியங்களில் முக்கிய ஹேதுவான "பசுபதியையே குறித்து மகாயாகங்களைச் செய்து அதனது பிரயோசனத்தினால், நம்பெருமானுடைய திருவடி நீழல் அடையலாமென யெண்ணின், மகாயோகிகளாய்த், தவசிரேஷ்டாளாய். உள்ள எத்தனையோ அன்பர்கள் வன்மீகங்களால் மூடப்பெற்றும், விருக்ஷ சாதிகள் முளைக்கப்பெற்றும் ஒன்றுந் தோன்றாது தவஞ்செய்கின்றனர்களே அவர்கட்கெல்லாமிரங்கி இதுகாறும் அநுக்கிரகம் ஒன்றையுங்காணேமே. பாவியாகிய நாம் பொது நீக்கி யாகஞ்செய்யின் நமக்கிரங்கி நம் யாகத்தின்கண் வந்து அவிப்பாகம் வாங்கி உய்யும் வண்ணம் அருள் செய்வானோ என்று பலவாறு ஏக்கமுற்று பஞ்சாட்சர ஜபம் பண்ணி அதன் வசத்தராய், ஏ, சம்போ சங்கரா கருணாநிதே என்று பலவாறு தோத்திரம் பண்ணித்துன்புறுவாராயினர்.

இவ்விதம் துன்புற்று நம்மால் செய்யக்கூடியது வொன்று மில்லை நம் கடவுளுடைய மெய்யடியார்கட்குத் தொண்டு செய்து அவர்களுடைய திருவருளினால் இவ்விதமாய்ப்பொது நீக்கித்தலைவனைக்குறித்து மகா யாக பூர்த்தி செய்யவேண்டிய பாக்கியத்தை யடைய வேண்டுமேயன்றி வேறில்லை யெனத்துணிந்து திருக்கைலாசத்தின்கண் பரமசிவத்திற்குப் பூமாலை தொடுத்துச்சாத்துவதும் விபூதி பொட்டகக்கோயில் வைத்துக்கொண்டிருந்து சுவாமிக்கு எக்காலத்தும் ஏந்திச்செல்கின்றதுமாகிய தொண்டுசெய்து ஆலாலசுந்தரரென்ற திருப்பெயருடனிருந்து

"பெருகிய வளத்தான்மிக்க பெருந்திரு நாடுதன்னில்
அருமறைச்சைவ மோங்க வருளினாலவதரித்த
மருவிய தவத்தான் மிக்கவளம் பதிவாய்மை குன்றாத்
திருமறையவர்கணீடுந் திருநாவலூராமன்றே

மாதொரு பாகனார்க்கு வழிவழியடிமை செய்யுந்
வேதியர் குலத்துட்டோன்றி மேம்படு சடையனாருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானியார்பாற்
றீதகன்றுலக முய்யத் திருவவதாரஞ் செய்து

செல்வத் திருவாரூரின்கண்ணெழுந்தருளியிரா நின்ற சுந்தர மூர்த்தி சுவாமிகளைத் தெரிசனஞ்செய்து அவர்கள் சந்நிதியில் இம்மகாயாகத்தை நிறைவேற்றி வைக்கப்பிரார்த்திப்போமென அத்திருவாரூரை யடைந்தனர். அத்திருவாரூர் எல்லையைக் கண்டவுடன் நமஸ்கரித்து தோத்திரம் பண்ணிக்கொண்டு அத்திருவாரூரில் வருகின்ற அடியார்களை யெல்லாம் பரானந்த மயமாக்குகின்ற கமலாலய தீர்த்தக்கரை சென்று தீர்த்தத்தைத் தெரிசித்து அத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி நித்திய கடன்கள் முடித்துச்சிவாலயத்துட் சென்றனர். அச்சிவாலயத்தைப்பிரதக்ஷணம் வருகையில் ஆங்குள்ள தேவாசாரிய மண்டபத்தில் எழுந்தருளியிரா நின்ற அடியார்களை எல்லாம் ஆனந்தக்கண்ணீர் சொரிய, மெய்மயிர்க்கால்கடோறும் புளகாங்கிதங்கொள்ள, தன்னைமறந்தவராய், அஷ்டாங்க நமஸ்காரத்துடன் தோத்திரஞ் செய்துகொண்டு வலம்வந்து அடியார்கூட்டத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் விளையாட்டாகச் செய்துகொள்ளும் திருவார்த்தைகளைச்செவிக்கேற்று மானுடஜன்மமெடுத்தவர்கள் அடையவேண்டிய பேறுகளுள் இவ்விதமான அடியார்கூட்டத்தின் மத்தியில் அல்லவோவிருந்து ஆன்மலாபத்திற்கு ஏதுவான விஷயங்களை அடையவேண்டும்.

"செவியிற் சுவையுணராவாயுணவின் மாக்கள்
அவியினும் வாழினுமென்"

என்று அநுக்கிரகம் பண்ணியிருக்கின்றார்களே என அடங்காத மகிழ்ச்சியுடையவராய், அவ்வடியார் கூட்டங்களின் மத்தியிலுஞ் செல்லாது ஓரங்களில் நின்று சில நாள் வசித்தனர். அவ்விதம் வசிக்கின்ற காலத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகளிடத்து எவ்வித விண்ணப்பமுஞ் செய்துகொள்ளமுடியாமல் மனதின்கண் தனது எண்ணத்தை நிறைவேற்றி வைக்கப்பிரார்த்தித்து ஆனந்தமாகத் தெரிசனஞ்செய்து மனதின்கண் அளவிடப்படாத எண்ணமுடையவராய். இத்தம்பிரான்றோழராகிய இப்பரம குரு மூர்த்திக்கு பாதகாணிக்கை வைத்துத்தெரிசிக்க எவ்விதப்பொருளை உபயோகப்படுத்துகிறது எதில் சுவாமிகளுக்கு விருப்பமுளதோ என்று பலநாள் ஆராந்து சுவாமிகட்கு எல்லாம் இறைவன் நேரில் அளிக்கின்றான். அறிவிலும் பொருளிலும் அருளிலும் யாவற்றிலும் ஏழையாகிய யாம் என் செயக்கடவோம். சுவாமிகள் நம்மையுமோர் பொருட்படுத்தி இக்கூட்டத்தில் ஒருவனாக ஆண்டுகொள்வாரோ, நாம் யாது செய்தால் என்று கொள்வர் என்று பலவாறு ஏக்கமுற்றனர்.

சோமாசிமாறனாரவர் தியாகராஜப்பிரபுவை இடைவிடாது தியானித்துக்கொண்டு பரமாசாரியப்பிரபுவாகிய சுந்தர மூர்த்தி

சுவாமிகளுக்கு எந்த பதார்த்தத்தில் விருப்பமுளதுயென்று ஆங்குள்ள அடியார் கூட்டங்களை விசாரிப்பாராயினர். அதில் ஒரு சிவநேசர் சுவாமிகளுக்கு என்ன குறைவுயிருக்கின்றது வேண்டுவதெல்லாம் தியாகராஜப்பிரபுவே கொடுக்கின்றார். ஆயினும், ஒவ்வொரு நாளிலும் நடந்தேறி வருகின்ற மகேஸ்வர பூஜைகாலங்களில் சுவாமிகட்கு எவ்விதமான பதார்த்தங்களைப்பார்க்கிலும், தூதுவளம்பூ, காய், கீரை, இதுகளில் கொஞ்சம் விருப்பமுளதாகத்தோணுகின்றது அதில் பரவையம்மைக்கும் அதிக விருப்பமென்று குறிப்பினால் தோன்றுகிறன்றதென அறிவிக்க அவ்வார்த்தையைக்கேட்டவுடன் சோமாசிமாறருக்குப் பிறவிக்குருடனுக்கு இரண்டு நேத்திரங் கிடைத்தாற்போலும், மகாவறுமையுடையோனுக்குக்கனகாபிஷேகஞ்செய்தது போலும் மகாசந்தோஷமடைந்தவராய்ப்பின் அம்பர் என்னும் பதிக்குவந்து சேர்ந்தனர். அம்பர் க்ஷேத்திரத்தில்ஹரி சொல் நதிக்கரையில் பரிசுத்தமான இடங்களில் படர்ந்திராநின்ற தூதுவிளஞ் செடியிலுள்ள பூ இலை காய் முதலானதும் வெகு அருமையாய்ப் பரித்து திருவாரூரில் சுவாமிகள் சிவாலயத்தில் இதோ செல்கின்ற பெண் ஆனவள்

> "கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
> பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
> விற்குவளை பவள மலர் மதிபூத்த விரைக்கொடியோ
> அற்புதமோ சிவனருளோ வரியேனென்றதிசயித்து"

பரவையம்மையாருடைய திருமாளிகையின் முகப்புவாசலில் கொண்டுபோய் வைத்துக்காத்திருந்து மாளிகையின் கண்உள்ளேயிருந்து வருகின்ற சேடிகளைப்பார்த்து அம்மா கொஞ்சம் தூதுவளம்பூ காய் இருக்கின்றது இதைக்கொண்டுபோய் உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டுமெனப்பிரார்த்துக்கேட்டுக்கொண்டனர். அச்சேடியர்கள் இது நல்ல பூவாயும் காயாயும் இருக்கின்றது. இதுதான் அம்மாளுக்கு ஏத்தபதார்த்தமென்று அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதைக்கேட்டு பரவசமுற்று ஒவ்வொரு நாளும் இவ்விதமாகவே மேற்சொன்ன பதார்த்தங்களைக்கொண்டு போய் முன்கூறியவாறே முகப்பின்வாசலில் வைத்துவிட்டு ஆங்குள்ள கமலாலய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி தியாகராஜப்பெருமானையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் தெரிசித்து மீள்வாராயினர்.

பரவையம்மையினுடைய சேடியர்கள் அப்பதார்த்தங்களை மாளிகையில் சுவாமிகட்கும் சமையல் செய்யும்படி ஏற்படுசெய்வாராயினர். இவ்விதமாக அநேக நாள்கொண்டுபோய்க்கொடுத்து

கொண்டுவருகையில் ஓர்நாள் மேகங்களால் வருஷிக்கப்பட்டு அதனால் வெள்ளம் பெருக்கெடுத்து செல்வதற்கு மார்க்கமன்னியில் "சோமாசிமாறர்" ஒவ்வொரு நாளும் அடியார்கட்குச் செய்து வந்த தர்மமானது நடைபெறாமல் தடைப்பட அச்சமடைந்து,

"அறத்தினூங்காக்கமுமில்லையதனை
மறத்தலினூங்கில்லைகேடு"

என்று விதித்திருக்கின்றதே இஃது நம்பெருமானுடைய பரிசோதனையென்று அன்றுதினம்முழுமையும் யாதொருவித ஆகாரமுமில்லாதவராயிருந்தனர். அன்றுதினம் இராத்திரி சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையம்மையினுடைய மாளிகைக்கு வந்தகாலத்து போசனஞ்செய்து இன்றுதினம் தூதுவளம்பூ-காய் இலைமுதலானதுகளும் ஏன் சமையல் செய்ய ஏற்பாடு செய்யவில்லை யென்று விசாரிக்க அம்மையானவள் மனநடுக்குற்று சேடிகளைப்பார்த்து வழக்கம்போல்வாங்கி தூதுவளம்பூ, காய், இலை ஏன் கொடுக்கவில்லை யென்று வினவ சேடியானவர்கள் எப்போதுங்கொண்டு வருகிற பிராமணர் இன்றுதினங்கொண்டு வரவில்லை யென்றனள். அம்மையானவள் அந்தப்பிராமணர்யாவர் அவரிடத்து நீங்கள் விலை கொடுத்துவாங்குகிறதா விலைகொடாமல் வாங்குகிறதா அவர்கள் எந்தவூர் என்றும் விசாரித்தனள். அம்மே அந்தப்பிராமணருடைய ஊர் எங்களுக்குத் தெரியாது அவர்களிடத்தில் நாங்கள் விலை கொடுத்து வாங்குகிற வழக்கமும் இல்லை. அவர்கள் முன்னொருநாள் மக வணக்கமுடையவராய்ப் பயபக்தியோடு நின்று, அம்மா, கொஞ்சம் தூதுவளம்பூ, காய்,கீரை, கொண்டுவந்திருக்கின்றேன். இதைக் கொண்டுபோய் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று முகப்பின் வாசலில் வைத்தார். நாங்கள் அதைக்கொண்டுவந்து சுவாமிகட்கும் கொடுத்து சமையல் செய்து வந்தோம். அவர்கள் அவ்விதமாகவ்வ ஒவ்வொரு நாளுங் கொண்டு வந்தார்கள் இன்றுதினம்வாராததினால் கொடுக்கவில்லை இதையன்றி வேறொன்றுந் தொரியாதென்றனள். அம்மையானவள் சேடிகளைப் பார்த்து ஏன் நீங்கள் விலைகொடாது வாங்கினீர்கள். இனியப்பிராமணோத்தமர் வருவாராயின் நம்மைப்பார்த்துப் போகும்படி சொன்னதாகத் தெரிவித்து அழைத்து வாருங்கள் என உத்தரவளித்தனள். (சோமாசிமாறரானவர்) மறுநாட்காலையில் மிக அச்சமுடையவராய்ச்சென்ற நாள் வீணாளாய் அடியார்கட்குச்செய்யவேண்டிய பணிகள் ஒன்றுமின்றிப்போய் விட்டதே என்று துக்கசாகரத்திலழுந்தி ஒவ்வொருநாளும் எவ்வளவு பூ, இலை, காய், கொண்டு போவாரோ அதின் இரு மடங்கு அதிகமாய்க் கொண்டு போய் வழக்கம் போல் வாசலில் வைத்து நின்றார். சேடியர்கள் வந்து

பார்த்துஎ அய்யரே நேற்றைய தினம்வராமல் இருந்து விட்டீர்களே என்ன காரணமென்று கேட்க, அம்மா, மழை பெய்து அதனால் வெள்ளம் பெருக்காகி வருவதற்கு மார்க்க மில்லாமல் எனது பாப வசத்தினால் முடியாதிருந்து இன்று தினம் வந்தேன் என்றனர்.

நாங்கள் உள்ளே போய் வருமளவில் இங்கே யிருங்களென்று சொல்லிவிட்டு இப்பிராமணரவர்களால் கொண்டுவந்த பூ, இலை, காய்முதலானதுகளெல்லாம் பரவையம்மையினுடைய சந்நிதானத்தில் கொண்டுபோய்வைத்துத்தெரிவித்து அப்பிராமணரவர்கள் முகப்பு வாசலில் இருக்கின்றார்களென்றும் அறிவித்தார்கள். அம்மையானவள் அச்சேடிகளைப்பார்த்து அப்பிராமணரவர்களை இங்கே அழைத்துவாருங்களென்று ஆக்கியாபித்தனள்.
அச்சேடியர்கள் முகப்பு வாசலில் காத்திருக்கின்ற அய்யரவர்களிடம் வந்து தங்களை அம்மா அவர்கள் அழைத்து வரும்படி உத்தரவு கொடுத்தார்கள். மாளிகைக்குள் வரவேண்டுமென அழைத்தார்கள்.

சோமாசிமாறனானவர் ஆனந்தக்கண்ணீர் பெருக வெகுநாள் தாய் முகங்காணாத பிள்ளைகள் தாயைப்பார்த்தல்போலும் மழை முகங்காணாத பயிர்கள் மழையைக்காண்டல் போலும் பேரவாவோடு அம்மைக்கு அநேக ஆசீர்வசனங்களைச் சொல்லிக்கொண்டு உள்ளே சென்றனர். அம்மையானவள் இப்பிராமணோத்தமரைக்கண்டவுடன் ஓராசனத்திலிருக்கும்படி பலவாறு உபசரித்தனள். அம்மையினுடைய உத்திரவின் பிரகாரம் ஆசனத்திலிருக்க இப்பிராமணோத்தமரைப்பார்த்து மகாகிருபையுடையவளாய்த் தங்கள் வசிக்கும் இடம் யாது? இங்கே ஒவ்வொரு நாளும் தவராது தூதுவளம்பூவுங் காயுங்கீரையுங் கொண்டுவந்து கொடுப்பதற்கு காரணமென்னவென்று விசாரித்தனள்.

அம்மா நானிருப்பது "அம்பர்மாகாளம்" என்று சொல்லக் கூடிய க்ஷேத்திரம், எனது பெயர் "சோமாசிமாறன்" எனது முயற்சி எல்லாம் வல்ல தலைவனுடைய அடியார்கட்குத் தொண்டு செய்து இச்செனனமரணமாகிய பிணியை நீக்கிக்கொள்ள வேண்டுமென்ற கருத்து மகாபாவியாகிய எனக்குத் தோன்றுகின்றது என அறிவித்தனர். அம்மையானவள் அதி சந்தோஷமடைந்து மானுட ஜென்மம் பெற்றோர் அடையவேண்டிய முக்கிய பிரயோஜனம் அதுவேயன்றி வேறில்லை உண்மையாய் நோக்கின் தலைவன் எண்ணுவார் எண்ணுவதை முடிப்பன் எனத்திருவாக்களித்து தங்களுக்கு நம்மால் அடையவேண்டிய பிரயோசனம் யாதேனும் உளதாயின் தெரிவித்துக்கொண்டால் அவ்விதஞ்செய்வோமெனத்தெரிவிக்க அம்மே!! நான் அடையவேண்டியதன்மைகளெல்லாம்

முடிக்கத்தக்க வல்லமையுடைய இந்த இடத்தில் என்ன தெரிவிக்கப்போகின்றேன்; என்று விண்ணப்பஞ்செய்தனர். சுவாமின் தாங்கள் நெடு நாளாய் யாதொரு பிரயோஜனமன்னியில் செய்த நன்றிக்கு எதைக்கைம்மாறிடலாம்? என்ன செய்யலாமென யோசிக்கின் பிரதி பிரயோசனம் இன்னதெனத் தோன்றவில்லை. தங்களுக்கு யாதாயினும் வேண்டுங்காரியங்களைத் தெரிவித்துக் கொண்டால் முடித்துத் தருவோமென உத்தரவளித்தனர். அம்மே!! ஜனன மரணங்களை நீக்கிக்கொள்ளும் வண்ணம் வேதாகம சாஸ்திரங்களை விச ரித்ததில் பசுதன்மம் என்றும் சிவதன்மம் என்றும் இரண்டு பாகு பாடாயும் அதிலும் பசுதன்மம் நீக்கி தலைவனையே குறித்து சிவதன்மமாகிய மகாயாகங்களைச் செய்யின் மோக்ஷம் அடையலாமென விதித்திருக்கின்றது. இப்பிறவி தப்பினால் எப்பிரவி வாய்க்குமோ யாது வருமோவறிகிலேனாகையால், பொது நீக்கித்தலைவனைக்குறித்து மகாசோமயாகஞ்செய்ய உத்தேசிக்கின்றேன். அவ்யாகம் நிறைவேற எனது பரம கிருபாதயாளுவாகியும் சைவ சமய சற்குரு மூர்த்தியாயுமுள்ள சுந்தரமூர்த்திசுவாமிகள் கடைக்கண் பார்த் தருளுவாராளாயின் அவ்யாகம் முடிவு பெறும் என்றனர்.

அம்மையானவள் மகா கிருபையுடையவளாய் அவ்வியாக பூர்த்தி செய்யவேண்டியதற்கு சுவாமிகள் செய்யவேண்டிய வுபகாரமாவது யாதென விசாரித்தனள். அம்மா இவ்விதமான யாகம் உலகுய்ய திருவவதாரம் பண்ணிய (ஞானசம்பந்தப் பெருமானுடைய) பிதா, சிவபாத விருதயர் முதலாகிய மகாதவ சிரேஷ்டர்களுக்கே அருமையானால் எம்போன்றவர்களுக்கு சுவாமிகள் கிருபை செய்து தியாகராஜப்பிரபுவை பிரார்த்தித்துக்கொண்டால் முடிவு பெறும் என்று விண்ணப்பஞ் செய்ய அவ்விண்ணப்பஞ் செவிக்கேற்று ஒன்றுந் தோன்றாதவளாய் இவ்விதமாக ஒருவருக்கொருவர் சொல்லும் வழக்கம் உண்டோவெனத் திடுக்கிட்டு நடுக்கமுற்று எண்ணாதவெண்ணமெல்லாம் எண்ணி, ஏ பக்தசிகாமணி தங்கட்கு அதிக நேரமாய் விட்டமையால் நான் வாயினாற் சொல்லிவிட்டேன் தாங்கள் போய் வாருங்களென வுத்தரவளித்த ள், சோமாசிமாறனாவர் அவ்வுத்தரவைப்பெற்று அம்பர் என்னும் பதிக்கு வந்து எப்போதும் நடாத்தி வந்த நித்திய தர்மமாகிய தூதுவளம் பூ இலை காய் முதலானதும் வழக்கம் போல் செய்து வருவாராயினர். அவ்விதம் நடந்து வருகையில் ஒரு நாள் பரவையம்மையானவள் சோமாசிமாறர் கேட்டுக் கொண்ட விஷயத்தை சுவாமிகட்கு எவ்விதம் அறிவிப்பதென மனக்கிலேசமடைந்து தாம் படுக்கையினின்று எழுந்து ஒவ்வொரு நாளுஞ் செய்து வரும் நித்திய கடன்கள் யாதொன்றுஞ் செய்யாதவளாய்த்தமது

மாளிகையின் கதவையுந் தாளிட்டு சேடி முதலிய ஒருவரோடும் பேசாதவளாய்ச் சயனித்திருந்தனள்.

அன்று தினம் இராத்திரி சுவாமிகள் தியாகராஜப்பெருமானுக்குச் செய்யவேண்டிய பணிகளெல்லாஞ் செய்து பரவையம்மையின் மாளிகைக்கு வந்தனர். கதவுகள் தாளிட்டிருப்பதைப் பார்த்து சேடிகளைக்கூவி என்ன விசேடம் பரவையார் எங்கே என்று விசாரித்தனர். சேடியானவள் சுவாமின் இன்று தினம் இதுகாறும் அம்மையானவள் படுக்கையினின்று எழுந்திருக்கவேயில்லை எங்கள் ஒருவரோடும் வார்த்தையுமில்லை அம்மையினுடைய திருமேனிக்கு யாது தொந்தரவோ அல்லது மனக்கிலேசமோ அறியேம் என்றார்கள். சுவாமிகள் மனம் பதைத்து அளவிடப்படாத துன்பமுற்று மெதுவாய்க்கதவைத் திறக்கும்படி செய்து அம்மையினுடைய நிலைமையைப்பார்த்து இவ்விதத்துன்பம் அடைய யாது காரணமென விசாரித்தனர். அம்மையானவள் ஒன்றுஞ்சொல்லாதவளாய் எல்லாம் வல்ல தியாகராஜப் பிரபு எனது காலத்தை இன்றுடன் முடித்தனர் போலும் என்று பேச சக்தியற்றவளாய் இருந்தனள். சுவாமிகள் அம்மைக்குத்திருமேனியில் எவ்வித குற்றமுமில்லை. யாதோ மனக்கிலேசமெனவறிந்து யாது காரணம் ஆகவேண்டியது அதற்காக ஸ்நானம் போசனம் முதலானதும் இல்லா திருந்தால் யாது பிரயோஜனம். ஸ்நானம் போசனமுடித்து எவ்வித காரியமாயினும் வேண்டுங் காரியங்களைத் தெரிவித்தால் செய்து முடிப்போமெனத் திருவாக்களித்தார்.

பரவையம்மையானவள் சுவாமின் தாங்கள் தம்பிரான்றோழரென்றும் நான் தங்களுடைய பத்தினியென்றும் உலகமெல்லாம் வியப்படைய வாழ்ந்தோம். இக்காலம் எனது வாயினால் சொன்ன வார்த்தை தவறுதல் வருமென்று மனம் துன்பமடைகின்றது. அவ்விதம் வார்த்தை தவறி இவ்வையகத்தில் வாழ்வதைக்காட்டிலும் உயர் துறத்தல் நன்று. அதினும் நான் வார்த்தை தவறியதாகச் சொல்வதை இவ்வுலகத்தார்கள் சுந்திரமூர்த்தி சுவாமிகளுடைய பத்தினி பரவையார் சொன்ன வார்த்தை தவறி விட்டனள் என்று உலகம் அலர் தூற்றும் அத்தூற்றுதலைக் கேட்டு உயிருடனிருந்து வாழ்வதினும் உயிர் துறத்தல் நலமாய் முடியுமென்று எண்ணுகின்றேனென்றனள். சுவாமிகள் பரவையாரைப்பார்த்து உன் வாயினால் சொல்லியது எக்காலத்துந் தவறுதல் வாராது முன் சொல்லியபடி ஸ்நானம் போசனம் முடித்து வருவாயென்று பின்னும் ஆக்ஞாபித்தனர், அவ்வார்த்தையைக் கேட்டவுடன் மகா சந்தோஷமடைந்து ஸ்நானம் முதலிய நித்திய கடன்கள் முடித்துப் போசனஞ் செய்து சுவாமிகளிடம் வந்து

பேசியிருக்கின்ற காலத்து (சுவாமின்), சொஞ்ச நாட்களுக்கு முன் இன்று தினம்ஏன் தூதுவளம் பூ, இலை காய் சமையல் செய்யும்படி செய்யவில்லை யென்று கேட்டதின்பேரில் சேடிகளை விசாரித்ததில் எப்போதுங் கொண்டு வருகிற பிராமணர் கொண்டு வரவில்லை என்றனள். பிரதி பிரயோசனமன்னியில் நெடு நாளாக நமக்கு வேண்டிய முக்கிய பதார்த்தமாகிய தூதுவளம் பூ இலை காய் முதலானதும் கொண்டு வந்து கொடுத்தமையால் அப்பிராமணோத்தமர் வருவாராயின் அழைத்து வரும்படி சொன்னேன். மறு நாள் அப்பிராமணர் வந்தார். அப்பிராமணரவர்களை விசாரிக்கத் தன்னுடைய ஊர் திரு அம்பல் மாகாளமென்றும், பெயர் சோமாசிமாறரென்றும் தெரிவித்தனர். அவர்களைத் தாங்கள் பிரதிப்பிரயோசனமன்னியில் ஒவ்வொரு நாளுந் தவறாமல் தூதுவளம் பூ காய் கீரை முதலானதுங் கொடுத்து வருகின்றீர்களே நம்மால் அடையவேண்டிய பிரயோசனம் யாதேனும் உண்டாயின் தெரிவித்துக்கொண்டால் அவ்விதம் முடிப்பதாய்ச் சொன்னேன். அவர்கள் இவ்விதம் கேட்பார்களென வறியாது உலகத்தில் முக்கியபிரயோசனமானநெல்,மணி, பொன், முதலியவற்றைக்கேட்பார்களென வெண்ணி வேண்டியதைத் தெரிவித்தால் செய்வதாய்ச் சொன்னேன். அவர்கள் அவ்விதமாக ஒன்றையுங் கேளாது தாம் பசு தன்மம் நீக்கிச் சிவதன்மம் செய்யவேண்டியதாயும் அச்சிவதன்மத்துள் ஒன்றாகிய ஓர் மகா யாகம் பொது நீக்கித்தலைவனைக்குறித்துச் செய்யவும் அவ்யாகத்தில் தியாகராஜப்பெருமான் அவிப்பாகம் பெறும்படி சுவாமிகளால் முடியவேண்டுமென்றும் அந்தயாகத்திற்கு சுவாமிகள் எழுந்தருளவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டனர். அவர்கட்கு என்னவேண்டுமோ அவ்விதஞ் செய்வதாய் முன்னமே வாக்குக் கொடுத்து விட்டேனாகையால் இவ்விஷயங்களை எவ்விதந்தெரிவிப்பதென பயந்து அதனால் துன்பமடைந்தேன் என்றனள். சுவாமிகள் புன் சிரிப்புகொண்டு இவ்வளவு துன்பமடைவானேன். அவ்விதமே முடிப்போமென திருவுளம்பற்றினார். அம்மை அதி சந்தோஷமடைந்தனள். பின் தியாகராஜப்பெருமானோடு அடியார்களுடைய குணங்களையும் அடியார்கட்குச் செய்யும் அனுக்கிரகத்தையும் பற்றி அதி சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்குங் காலத்தில் மகப்பிரபு இவ்வுலகத்தில் திருஅம்பல் மாகாளமென ஒரு க்ஷேத்திரமிருக்கின்றது அதில் சோமாசிமாறரென்ற ஒரு பிராமண சிரேஷ்டர் இருக்கின்றார் அவர்

"எத்தன்மையராயினு மீசருக்கன்பரென்றால்
அத்தன்மையராம் நம்மையாள்பவரென்று கொள்வார்
சித்தந்தெளியச் சிவனஞ் செழுத்தோது வாய்மை
நித்தநியமமெனப்போற்று நெறியினின்றார்"

இவ்விதமாகிய மகாபக்தியுடையவர் அவர் பொது நீக்கித் தங்களைக் குறித்து யாகஞ் செய்யவேண்டுமெனவும் அந்தயாகத்தில் தாங்களே அவிப்பாகம் வாங்கவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றார் என்றறிவித்தார்கள். தியாகராஜப்பெருமான் ஆனால் நாம் எவ்வித கோலமாய் வரினும் கண்டறிந்து அவிப்பாகங் கொடுப்பாரோ என்றனர். அவ்விதம் அறியும் விசேட அறிவுடையவரேயன்றி வேறில்லை என்றனர். அவ்வாக்கியங்களைக் கேட்டவுடன் தியாகராஜப்பெருமான் அவ்விதம் அறியுஞ் சக்தியுளதாயின் நாமே சென்று அவிப்பாகம் வாங்குவோ மென்றனர். அத்திருவாக்கைக் கேட்டு சுந்திரமூர்த்தி சுவாமிகள் பரவையம்மையினுடைய மாளிகைக்கு வந்து பரவையாரைப்பார்த்து சோமாசிமாறரை அவர் எண்ணியவண்ணம் மகா யாகம் செய்ய உத்திரவு கொடுக்கும்படி திருவாக்களித்தார். அம்மையானவள் சேடிகளிடஞ் சொல்லி அச்சற்பிராமணர் வருவாராயின் இங்கே அழைத்து வாருங்களென ஆக்ஞாபித்தனள். மறு நாட் காலையில் வழக்கம் போல் சோமாசிமாறர் வர சேடிகள் அம்மாள் வந்து பார்க்கும்படி உத்தரவு கொடுத்தார்களென்று விண்ணப்பிக்க, அவ்விண்ணப்பத்தைக் கேட்டு உள்ளே சென்று அம்மையைத் தெரிசிக்கத் தாங்கள் கோரிக்கையின்படி யாகஞ் செய்யலாமென உத்தரவளித்தாள்.

அம்மே தாங்களும் சுவாமிகளும் வந்திருந்து மகா யாகத்தைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். அம்மையானவள் சுவாமிகளிடஞ் சென்று வந்திருந்து யாக பூர்த்தி செய்து தருமபடி பிரார்த்தித்துக்கொள்ளுங்கள் என்றனர். சோமாசிமாறரானவர் சுவாமிகள் சந்நிதானத்திற் சென்று அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து ஏ பரம சற்குரு சிகாமணி அவ்விடத்து உத்திரவின் பிரகாரம் அடியேனால் செய்யப்புகுகின்ற யாகத்தை அம்பரென்னும் பதிக்குத் தேவரீர் எழுந்தருளி வந்திருந்து பூர்த்தி செய்து தரவேண்டுமெனப் பலவாறு பிரார்த்தித்தனர். அப்பிரார்த்தனைக்கிரங்கி அவ்விதமே வருகின்றோமெனவும் யாக ஆரம்பம் செய்யும்படிக்கும் உத்தரவு கொடுத்தார்.

"சீருந்திருவும் பொழியுந் திருவாரூரெய்தி
யாரந் திகழ்மார் பினனூக்கவன் றொண்டர்க்கன்பாற்
சாரும் பெரு நண்பு சிறப்பவடைந்து தங்கிப்
பாரும் விசும்பும் பணியும் பதம் பற்றியுள்ளார்.

இப்பூவுலகத்தின் கண்ணும் தேவலோகத்தின் கண்ணும் உள்ளவர்களும் மகா அதிசயமடைந்து இவ்விதம் பெறக்கூடிய

அன்புடைய மஹான்களும் இருக்கின்றார்களாவெனவும் அவர்களை தெரிசிக்கவேண்டுமெனவும் உசாவு வாராயினார்கள். சோபாசிமாறரானவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் அம்மையும் வரவழைத்து வைத்துக்கொண்டு (அப்பர் க்ஷேத்திரத்தில் யாகசாலை அமைக்க வேதாகமங்களில் எவ்வளவு பிரமாணங்கள் குண்ட மண்டவேதிகை விதித்திருக்கின்றதோ கொஞ்சமுந் தவராமல் அமைத்து அதில் யாக அனுஞ்ஞை விக்னேஸ்வர பூஜை முதல் ஆரம்பித்தனர். அவ்விதம் யாகஞ் செய்து யாக பூர்த்தி செய்யவேண்டிய தினத்தில் திருவாரூர் தியாகராஜப்பிரபு இப்பூவுலகத்தின் கண்ணுள்ள அடியார்கட்கு இதுகாறும் அனுக்கிரகம் பண்ணாத கோலமாகிய நீசவுருவமாய் திருவுருவமைத்து வந்தனர்.

அஃதாவது தியாகேசப்பெருமான் தமது நீண்ட சடாபாரத்தை கருப்பு உருமாலையாகச்சிரசில் கட்டியும் நந்தியெம்பெருமானை செத்தகன்றுகத்தோளில் தூக்கியும் தமது திருக்கரத்திலமைந்த தமருகத்தைச் சகடைக்கட்டையாகவும் நான்கு வேதங்களையும் நான்கு நாய்க்குட்டிகளாகவும் அஷ்டதிக்குப்பாலகர்களெல்லாம் டங்கா, வாங்கா, கொம்பு, தப்பட்டம், அடிக்கிர ஆள்களாகவும், அம்மை நீசஸ்திரியாகவும் தமது சடாபாரத்தின்கண்ணுள்ள கெங்கையை மதுவாக்கி ஓர் குடத்தின் கண்ணமைத்து அம்மையினுடைய சிரசில் வைத்தும் விக்னேஸ்வரர் கந்தர் முதலிய பிள்ளைகளை நீசப்பிள்ளைகளாக்கியும் ஆரூரின் கண்ணின்று புறப்பட்டு வருகிற மார்க்கங்களில் அநேக அடையாளங்கள் கட்டியும் அம்மையினுடைய சிரசில் இரானின்ற மதுக்குடமானது பொங்கிவழிய யாகசாலைக்குச்சமீபித்தனர்.

யாகசாலையில் இருந்த பிராமணர்களும் தெரிசனத்துக்கு வந்திருந்த கூட்டத்தார்களும் மகாதுக்கவசத்தர்களாய் நேரில் வந்து கடவுள் அவிர்ப்பாகம் வாங்கப்போகின்றார் என்றும் இவ்வுலகத்தில் செய்கினற யாகம்போல் நாம் செய்யவில்லை என்றார்களே அதுதான் அவர் செய்கின்ற யாகத்தில் பறையன் பறச்சி வரும்படி நேர்ந்ததென்று, இந்த முகத்தில் கண் கொண்டு காண்கின்ற மூடர்கள் வாயினால் எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவு நாத்தழும்பேரினர்கள் வேதியர்கள் யாவர்களும் யாக கர்த்தாக்களை உத்தேசித்து வழக்கம்போல் செய்யாமல் தான் ஒரு விதமாய் யாகஞ்செய்யத் துணிந்தார். யாகஞ்செய்யுமுறையைப் பாருங்களென்று சாத்திரங்காட்டினார். அநேக சமயவாதிகள் தங்கள் தங்களுடைய சமயஉண்மைகளையும் இச்சமயத்தில் சாத்திரங்களில் உள்ளவண்ணஞ்செய்தும் முடிவு பெறாத தன்மையையும் பிரசங்கித்தனர். அநேக மாயாவாதிகள்: கடவுள் எங்கேயிருக்கின்றார்

வீணாய்ப் பொருள் செலவிட்டு இவ்விதமான யாகங்கள் செய்வதில் பிரயோசனமென்னவென்று வெகுதிண்ணமாய்ச்செப்பினார்.

சோம சிமாறர் நாணது வொழிந்து நாட்டின் கண்ணுள்ளார் பழித்துரை செய்கலை ஓர் ஆபரணமாகப்பூண்டு என்புநைந்துருகி நெக்கு நெக்கேங்கி அழலது கண்ட மெழுகதுபோல தாயைப்பிரிந்த பசுவின் கன்றானது எத்தன்மைத்தோ அத்தன்மையாய்க்கதறி இச்செகமானது தம்மை பேயனென்று சிரிக்கவும் ஆசையென்று சொல்லுகின்ற சமுத்திரமானது கறைபுரளமற்றோர் தெய்வத்தைக் கனவிலும் நினையாது [ஸ்ரீதியாகேசப்பெருமானையும் நேரில் எழுந்தருளிய சுந்திரமூர்த்தி சுவாமிகளையும்]மனதினாற்றொழுது அழுது உடலகளெல்லாங்கம்பித்தும் எ .பிரபுவே! யென்று ஆடியும, அலரியும், பாடியும், பரவியுப்பச்சமரத்தின்கண் ஆணி அறைந்தாற்போல கொண்டது விடாது பஞ்சாக்ஷர ஜபம் பண்ணிக்கொண்டிருந்தனர். அக்காலத்தில் தியாகேசப்பெருமான் ஆடிக்கொண்டுபோய் அம்மை மீது விழுதலும் அம்மையானவள் சிரசின் கண்ணுள்ள குடம் த ங்கமாட்டாது தத்தளிக்கவும், பின்னும் யாகசாலைக்குச் சமீபித்தனர். யாகசாலையில் இருந்த பிராமணர்கள் யாகசாலையில் போட்டிரானின்ற குண்டமண்டல வேதிகை கற்களை ஒவ்வொன்றாயெடுத்து நீசவடிவமாய் வந்திரா நின்ற பிரபுவின்மீதும் அம்மையின்மீதும் எறிய.; அம்மையானவள் கல் வருகின்றதேயென்று சுவாமிகன் பக்கலில் சார்வதும் பிள்ளைகள் வந்து சூழ்வதுமாய் யாகச லைக்குள் பிரவேசித்தனர்.

அங்குள்ள பிராமணர்கள் யாவர்களும் யாகசாலையை விட்டு ஓடி விட்டார்கள்.

அக்காலையில் மிகுந்தகிருபா தயாளுவும் குருமூர்த்தியுமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சோமாசிமாறரை ப்பார்த்து இவர் தான் தியாகராஜப்பிரபுவென சமிக்கையால் தெரிவிக்க சோமாசிமாறரும் அவர்களுடைய பத்தினியும் அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி கரமலர் தட்டிக்கொண்டு எங்களை யாட்கொள்ள வந்த, நான்மறை முதல்வா, குருமணி அரசே அமுதே, கனியே, யுணர்வே, விரிகடலுலகின் விளைவே, அருமையிலெளிய அழகே, கருமுகிலாகிய கண்ணே, வானோர்க்கரிய மருந்தே. போற்றி, என்று பலவாறு தோத்திரம் பண்ணினார்.

அக்காலையில் தியாகராஜப்பிரபுவானவர் இரண்டு அருமைத் திருக்கரங்களும் நீட்டினார். சோமாசிமாறர் அளவிடக்கூடாத அன்பே வசத்தராய் அவிப்பாகங்கொடுக்க ஏற்றருளினார். உடனே வானவர்கள் பூமாரி பொழிந்தனர்கள் ஆகாயத்தின்கண் அநேக வாத்தியங்கள் முழங்கின. பூலோகம் புவலோகம் சுவலோகம்

சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோக முதலாகிய, ஏழுலோகத்தவர்களும், மகா அதிசயமடைந்து இன்புறும்படி இம்மகாயாகத்தை முடித்து தியாசராஜப்பிரபுவினுடைய திருவடியையே தோத்திரஞ் பண்ணுவாராயினர்.

"யாழின் மொழியாடனிப்பாசரைப் போற்றும் யாகம்
ஊழின் முறைமை வழுவா துலகங்களான
ஏழுமுவப்பப் புரிந்தின் புறச்செய்த பேற்றால்
வாழுந்திற மீசர்மலர்க்கழல் வாழ்த்தலென்பார்"

அக்காலையில் தியாகராஜப்பிரபு தாம் எழுந்தருளிய மாறுவேடம் நீக்கி விரிஷபாரூடராய், முக்கண்ணராய், அம்பிகைசமேதராய், நீலகண்டராய், விக்கினேஸ்வரர், கந்தர், சண்டேசர் புடைசூழத்தெரிசனங்கொடுத்து, ஏ பக்த சிகாமணி யாவர்கட்குமுடிவுறாத மகாயாகத்தைப்பூர்த்திசெய்த அன்பனே உமக்குயாதுவேண்டுமெனத்திருவாய் மலர்ந்தருளினர். சோமாசிமாறரானவர் ஏ? பிரபுவே? யென்று பலவித தோத்திரம் பண்ணி நமஸ்கரித்து மகாபக்தியோடு சந்நிதானத்தில் நின்று

("மறைநான்கும் பயின்றொழுகி யட்டிகளும் பலவியற்றி
மல்லன்ஞாலத்
திறவாதபுகழ்படைத்தும்ஈசனடிக்கன்பிலரை
யெண்ணதுள்ளம்

என்றும் அநேக உண்மை வசனங்கள்கூறி இக்காலத்தில் பெரும்பாலும் பிராமணவருக்கத்தார் சிவநிந்தை செய்து மீமாஞ்சகர் கர்மப்பிரமமதமேற்கொண்டு தடுமாறுகின்றவர்களுமாய். பசுபதியானபரமசிவனை முத்தேவருள் ஒருவனென்றுபிதற்றுகின்றவர்களுமாய் வேதமும் வேள்வி முதலிய வைதிக கன்மங்களும் மித்தையாமென்று பொய்த்துரையாடுகின்றவர்களுமாய் தாப்பிரமப்பொருளாரனபரமசிவனுக்கு அடியாரம் முறைமை மேறுந்து நாம் பிரமமென்றுஏகாத்மவாதந்தலைக்கொண்டு அகந்தை உறுகின்றவர்களுமாய்இருக்கின்றார்கள். ஆயின் இவற்குஇதுசாபமொழுக்காமா.

"வைதிக சைவநான் மான மேகொளிலை
பொய்யிலைந்தெழுத்திற் கண்மணியிற் பூதியில்
ஐம்முகப்பிரானிடத்சன்புமிவ்வுகத்
தெய்திடுமிருபிறப்பாளர்க்கில்லையே"
"தாபதப்பிருகு மெய்த்த தீசிகன் னுவன்
சாபமன்றியுங்களி தோடத்தான் மிகத்
தீகப்பொருட்டாஎ்சாரத்திரம் பௌத்தமென்
பாயநூலுறுநியே பனவர்க்குண்டமோ"

என்றற்றெடுக்கத்தப்புராண வசனங்களாலும்

"சாவமுன்னாட்டக்கன் வேள்வித்தகர் தின்று நஞ்சமஞ்சி
யாவவெந்தாயென்றவிதாவிடு நம்மவரவரே
மூவரென்றேயெம்பிரானொடுமெண்ணி விண்ணாண்டுமண்மேற்
றேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே"

என்று பரமாசாரிய சுவாமிகள் இறங்கிக்கூறியதற்குஞ்சாக்ஷியாக இந்தயாகசாலையிலிருந்து தங்களை கடவுளென்றிடும்பாதகத்தவர்களாகிய வைதிகப்பிராமணர்கள் மதிமயற்சன்மத்தால் அடித்துப்பலவாறு நிந்தித்து தூஷணமுஞ்செய்தமையால், அவ்வைதிகப்பிராமணர்களை டறைபனுகும்படிக்கும் தேவரீர்கிருபைகூர்ந்து இதன்மேற்றிசையில் அதிசமீபமான பர்சாளக்ஷேத்திரத்தில் எம்மை ஆட்கொள்ளவந்த திருவுருவுடன் எழுந்தருளி உண்மையாய்த்தெரிசனம்பண்ணும் அடியார்கட்கு அவரவர்கள் வேண்டுவதை அநுக்கிரகம்பண்ணியும் அடியேங்கட்கு (மோக்ஷம்) அடையும்படிக்கும் கிருபை பாலித்தருளப் பிரார்த்திக்கின்றேனென்று தோத்திரம் பண்ணினார்.

தியாகராஜப்பிரபுவானவர் நாயனார் கேட்டுக்கொண்டவண்ணம் அநுக்கிரகம் பண்ணியும் சோமாசிமாறனாரையும் அவர் பத்தினியையும் புட்பப்பல்லக்கின்மீது தமது லோகத்திற்கு எழுந்தருளும் வண்ணம் கிருபை செய்தார். அவ்விதமே அவ்விருவர்களும் சிவலோகஞ்சென்று சிவபெருமானுடைய திருவடி நீழலில் இன்பமுற்றார்கள்.

"துன்றார் புலனைந்தடக்கி யறிகாகுத்தகுற்றம்
வென்றிங்கிது நன்னெறிசேரும் விளக்கமென்றே
வன்றொண்டர்பாகந் தொழுதான சிறப்புவாய்ப்ப
என்றுந்நிலவுஞ் சிவலோகத்தினின்பமுற்றார்"

இன்னும் அந்தக்ஷேத்திரத்தில் பூசித்துப்பேறுபெற்ற பத்திரகாளியம்மை திக்குப்பாலகர் ஆதிசேடன் மகாகாளரிஷி இராசாக்கள் முன்சாபமடைந்தவைதிக பிராமணர்கள் அச்சாபநிவர்த்திசெய்துகொண்ட சரித்திரமும் ஸ்தலபுராணத்துட்காண்க.

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க.

முற்றிற்று.